# தஞ்சாவூர் தலகாசி

## நகைச்சுவை வசன நாடகம்

*தஞ்சாவூரிலிருந்து தலகாசி*

**தாயுமானசாமி சோமசுந்தரம்**

**ஆகஸ்ட் 31, 2010**

***தலகாசி, ப்லாரிடா, வட அமெரிக்கா, ஆகஸ்ட்,*** *31, 2010-*

கடந்த வாரம், தலகாசி இந்திய கழகம் (www.iatlh.org) இந்திய சுதந்திர தினவிழா மற்றும் கலைவிழாவும் கொண்டாடியது. அதுசமயம், கழகத்தின் 200 உறுப்பினர்களும் அவர்களின் குடும்பத்தோர்களும், 250 பொது மக்களும் பங்கு கொண்டார்கள். சிறு குழந்தைகள், கல்லூரி மாணவர், மாணக்கியர், மற்றும் பெரியவர்களும் பங்கு பெற்ற அந்த விழாவை ப்லாரிடா மாநில பல்கலைக்கழக இளங்கலைப் பட்டப் பிரிவின் தலைவி ஆரம்பித்து வைத்தார். இந்திய மற்றும் அமெரிக்கா கொடி திறப்பின் பிறகு அனைவரும் தேசிய பாடல்களைப் பாடினார்கள். கலைவிழா உடனே துவங்கியது.

கலைவிழாவில் சிறுவர், சிறுமியர், பெரியவர்களின் கர்நாடகப் பாடல்களும், பரத நாட்டிய ஆடல்களும், வாத்திய இசைகளும், நகைச்சுவை நாடகங்களும் நடைப்பெற்றன. அப்படி நடை பெற்ற கலை விழாவில், தஞ்சாவூர்-தலகாசி என்பது ஒரு நகைச்சுவை வசன நாடகம்.

விவேக் மற்றும் தாயுமானசாமி சோமசுந்தரம் எழுதி நடித்த அந்த நாடகத்தில், சுந்தரம் மாமா தஞ்சாவூரிலிருந்து அமெரிக்காவில் இருக்கும் தன் அக்கா ஸ்வர்ணாவின் தலகாசி வீட்டுக்கு முதன் முறையாக வருகிறார். அவரை வரவேற்க அக்காவின் மகன், விக்ரம் விமான நிலையத்துக்கு வருகிறான். அங்கு தொடங்கும் உரையாடலில், மாமா சுந்தரம் இந்திய ஆங்கிலத்திலும், விக்ரம் அமெரிக்க ஆங்கிலத்திலும் பேசும் பொழ்து இருவரும் ஒருவரை ஒருவர் தப்பாக புரிந்து கொள்கிறார்கள். மாமாவின் ஆங்கிலத்தை விக்ரம் சரி செய்ய, மாமா விக்ரத்தை பரிசிகிக்க இதை கேட்பவர்களுக்கு அவர்களின் பேச்சு வார்த்தை ஒரு நகைச்சுவை விருந்தாக அமைகிறது. வீடு வந்த பிறகும் விக்ரமின் படிப்பும் பிற்கால வேலை பற்றிய பேச்சும் சிரிப்பை உண்டு படுத்துகிறது.

இந்த நாடகம் நல்லமுறையாக அமையவே, 10,000 கிராமங்கள் (10,000 Villages) என்கிற நியாயவிலை கடையின் (Fair-Trade Stores) நிர்வாகி இருவரையும் அழைத்து அவர்களின் கடையின் 5-வது ஆண்டுவிழாவின் போதும் நடிக்கச் சொன்னார்கள். 30-40 வாடிக்கைகாரர்கள் நாட்கத்தை

ரசித்தார்கள். இதே நாடகம் அடுத்த வாரம் தலகாசி முதியோர் விடுதியின் நிதி திரட்டு விழாவிலும் நடக்கவிருக்கிறது.

| தாயுமானசாமி & விவேக் சோமசுந்தரம் தஞ்சாவூர் தலகாசி நாடகம் | |
|---|---|
|  |  |
| தஞ்சாவூர் தலகாசி நகைச்சுவை வசன நாடகம் (சுதந்திர தின விழா) | தஞ்சாவூர் தலகாசி நகைச்சுவை வசன நாடகம் (நியாய விலைக்கடை) |